**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் பகுதி II - 2019**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் பகுதி II இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ''தி ஏஜன்ஸ் பிரன்சைஸ் டீ டெவலப்மன்ட்'' மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட 2018 ஒக்டோபர் 17 ஆம் திகதிய சீஎல்கே 1022 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 03 ஆம் உறுப்புரையின் 3.4.4 ஆம் பிரிவு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 3483 ஆம் எஸ்ஆர்ஜ 3484 ஆம் கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவரும் அமுலாக்கல் முகவருமாகும். தூய வலு உற்பத்தி முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 3 கூறுகளின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன. குறிப்பாக பரிமாற்ற உட்கட்டமைப்பு மேம்பாடு, நடுத்தர மின்னழுத்த மேம்பாட்டின் செயற்திறன் மற்றும் ஆற்றல் திறன் மேம்பாட்டிற்கான கேள்விப் பக்க முகாமைத்துவம். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 39,453 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 264.7 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 27,793 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 184.7 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்ததுடன் ''தி ஏஜன்ஸ் பிரன்சைஸ் டீ டெவலப்மன்ட்'' இனால் ரூபா 4,372.5 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ரூபா 80 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூலை 10 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

எனது அபிப்பிராயத்தின் படி, இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டத்தின் நிலையான சொத்துக்களைப் பதிவுசெய்வதற்கு இரு வேறு கொள்கைகள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் ரூபா 2.2 மில்லியன் நிலையான சொத்துக்களின் பெறுமதி மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்துக்களின் உள்ளபடியான பெறுமதி வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | ரூபா 2.2 மில்லியன் சொத்துக்கள் ''நடுத்தர மின்னழுத்த மேம்பாட்டு செயற்திட்டத்திற்காகவே கொள்வனவு செய்யப்பட்டு 977.00 கிரய நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளன. ஓர் சீரான முறையைப் பேணுவதற்கு மேலதிக நிதி முகாமையாளர் டீடீ4 கிளையால் உடனடியாக சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வை மாற்றுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். | நிகழ்ச்சித்திட்டம் அதன் சொத்துக்களைப் பதிவு செய்வதற்கு ஓர் சீரான முறையைப் பின்பற்ற வேண்டும். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டப் பதவியணிக்கான நிகழ்ச்சித்திட்ட நிதியத்தில் இருந்து ரூபா 5.86 மில்லியன் தொகையான வருடாந்த மிகையூதியம் நிதிக்கூற்றுக்களின் விளைவற்ற நேரக் கணக்கிற்கு தவறாக வரவு வைக்கப்பட்டிருந்தது. | விளைவற்ற நேரக் கணக்கு மீதி மிகைப்படுத்திக் காண்பிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டக் கணக்காளர் முறைமையின் பரீட்சை மீதியில் இருந்து தரவுகளைப் பெற்று பௌதீக ரீதியாகப் பதிவு செய்து தரப்பட்ட வடிவத்தில் தொகைகள் வடிவமைக்கப்பட்டன. வுடிவமைக்கப்படுகையில் ரூபா 5.86 மில்லியன் தொகையான மிகையூதியக் கொடுப்பனவுகள் தவறாக விளைவற்ற நேரக் கணக்கிற்குப் பதிவிடப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இத் தொகை மிகையூதியத்துடன் | உரிய பேரேட்டுக் கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொடர்புபட்டுள்ளதுடன் விளைவற்ற கணக்கில் பிற்காலத்தில் சீராக்கப்படும். | |
| (இ) | 2019 செப்தெம்பர் 5 ஆம் திகதிய திருத்தப்பட்ட கடன் உடன்படிக்கைகள் இல. 3483 / 3484 (எஸ்எப்)-எஸ்ஆர்ஜ இன் படி, கடன் உடன்படிக்கைகள் இல 2892/2893 ( தூய்மையான ஆற்றல் மற்றும் வலையமைப்பு ஆற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்) இல் நிகழ்ச்சித்திட்டத்தின் சேமிப்புகளைப் பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 220/33 கிலோ வோல்ட் மன்னார் கிரிட் துணை நிலையத்தின் நிர்மாணிப்புகளுக்கான நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளன. இதன் படி, யூஎஸ்டொலர் 1.6 மில்லியன் தொகை நிகழ்ச்சித்திட்ட நிதியத்தில் இருந்து ஏற்கப்பட்டு செலவினத்திற்கான முறையான கணக்கீட்டு சீராக்கங்கள் கையாளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் உள்ளபடியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடன் உடன்படிக்கைகள் இல 2892/2893 ( தூய்மையான ஆற்றல் மற்றும் வலையமைப்பு ஆற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்) இல் நிகழ்ச்சித்திட்டத்தின் சேமிப்புகளைப் பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட தொகைகள் செயற்திட்டக் கணக்குகள் - 2019 இன் கீழ் பதிவு செய்யப்பட்டு அவை அச் செயற்திட்டக் கூறுகளுடன் தொடர்புபட்ட 2019 ஆம் ஆண்டிற்கான எமது நிதிக்கூற்றுக்களில் (பக்கம் 22) குறிப்புகளில் எம்மால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. | நிகழ்ச்சித்திட்டக் கணக்குகளின் கீழ் சகல செலவினங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | ---------------------- | -------------------- | ------------------ | -------------------- | --------------------- |
| (அ) | எம்ஓஎப்பீ/ஈஆர்டீ/2007/02 ஆம் இலக்க 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய சுற்றறிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்பட வேண்டிய | கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. | கோவிட் 19 உலகத் தொற்றின் காரணமாக மேற்குறித்த கால எல்லை நிதிக்கூற்றின் சமர்ப்பிப்பிற்காக கடைப்பிடிக்கப்பட முடியாது போயிற்று. | சுற்றறிக்கைத் தேவைப்பாட்டிற்கு இணங்குதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | போதிலும் 2020 மே 28 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | | |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கை இல. 01/2016 இன் 09 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் அமுலாக்கல் கிரமமாக மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல செயற்திட்டங்களுக்காகவும் இலங்கை மின்சார சபையால் மாதாந்த முன்னேற்ற மீளாய்வு நடாத்தப்படுகின்றது. | செயற்திட்ட வழிகாட்டல் குழு ஸ்தாபிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 ஜுன் 15 ஆம் திகதிய சுற்றறிக்கை இல. டீஎம்ஏ/டீ/2015 | நிகழ்ச்சித்திட்டம் உள்ளகக் கணக்காய்வாளர் நிகழ்ச்சித்திட்டத்திற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல்வாங்கல்களின் பதிவின் மீதான நிதிக் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு செயற்பாடுகள் நலிவான நிலையில் காணப்பட்டது. | தற்போது, குறித்த செயற்திட்டத்திற்கான கணக்காய்வு இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கண்ணோட்டத்திற்குட்பட்டதாகும். இலங்கை மின்சார சபையின் செயற்திட்டப் பிரிவிற்குச் சொந்தமான சகல செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக ஓர் உள்ளகக் கணக்காய்வாளர் ஒதுக்கப்பட்டுள்ளார் | நிகழ்ச்சித்திட்டத்திற்கான உள்ளகக் இலங்கை மின்சார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் நிகழ்ச்சித்திட்டக் கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

கடன் உடன்படிக்கைகளின் படி, விரிவாக்கத்தின் பரிமாற்றம், நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் செயற்திறனை மேம்படுத்தல் மற்றும் ஆற்றல் திறன் நோக்கங்களுக்காக தேவைப்பக்க மேலாண்மை என நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 03 பிரதான கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டு ஏழு தொகுதிகளின் கீழ் ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், திட்டமிடப்பட்ட திகதியான 2016 ஜுலை 31 ஆம் திகதியில் இருந்து 02 வருட கால தாமதத்தின் பின்னர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் தாமதங்களைக் குறைப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது தொடர்ந்து செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கூறுகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | **ஆற்றல் திறன் நோக்கங்களுக்காக தேவைப்பக்க மேலாண்மை** வழங்கப்பட்ட ஸ்மார்ட் கிரிட் மற்றும் அளவீட்டு மற்றும் ஆலோசனைச் சேவைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் பின்னர் கைவிடப்பட்டு முறையான காரணங்கள் இன்மையால் செயற்திட்டப் பணியின் நோக்கத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்தன. | நிகழ்ச்சித்திட்ட நோக்கம் எய்தப்பட முடியாது போகும். | கட்டம் 02 இல் திட்டமிடப்பட்டபடி, பணியின் நோக்கெல்லையானது முழு கட்டுநாயக்க சீஎஸ்சீ இற்கும் ஸ்மார்ட் அளவீடுகள் பொருத்துவதாகும். முதிப்பீட்டுக் கிரயம் யூஎஸ்டொலர் 8.85 மில்லியனானதுடன் (பொருட்கள் சேவைகளுக்காக யூஎஸ்டொலர் 8.1 மில்லியனும் 0.75 உசாவுகைச் சேவைகளுக்காகவுமாகும்). மதிப்பீடு கட்டம் 01 இல் திட்டமிடற் கட்டத்தில் நிலவிய நிலைமையை அடிப்படையாகக் கொண்டதாகும். உசாவுனரின் சேவையைப் பயன்படுத்தாது வெவ்வேறு செயற்திட்ட அமுலாக்கல் உக்திகளைப் பயன்படுத்தி ஒரே வேலை திட்டமிடப்பட்டிருந்தது. அங்கீகாரத்திற்காக பீப்பீசீ இற்கான கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு ரீஈசீ திட்டமிடுகின்றது.(சில நாட்களிற்குள்). துற்போதைய மதிப்பீடு யூஎஸ்டொலர் 3.27 மில்லியனாகும். (i) இல் தொடர்புபடுத்தப்பட்டுள்ள கிரயம் விளக்கமற்றதாகும். அதே நோக்கெல்லையிலான வேலை குறைந்த கிரயத்தில் அமுலாக்கப்படுவதற்கு திட்டமிடப்படுகின்றது. | நலன்பெறுனரின் எதிர்பார்ப்புக் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் நிகழ்ச்சித்திட்டத்திட்டத்தின் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை அமுற்படுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | **நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் செயற்திறன் மேம்பாடு** | | | |
| (i) | கிடைக்கப்பெற்ற தகவலின் படி, பெலிகல மற்றும் அதுல் கோட்டே முதன்மைத் துணை மின்நிலையங்களைப் பெருக்குதல் மற்றும் இரத்னாபிட்டியவில் முதன்மைத் துணை மின்நிலையத்தை நிர்மாணித்தல் தொடர்பான கொள்முதல் செயன்முறைக்கு ஓர் பொருத்தமான ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுப்பதற்கு 2 ½ ஆண்டுகளுக்கு மேலான காலம் கடந்திருந்தது. 2019 நவம்பர் 14 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், காணி கையகப்படுத்தும் செயன்முறை 2 ½ ஆண்டுகளுக்கு மேல் எடுக்கப்பட்டது. குறித்த நோக்கத்திற்காக இரத்னாபிட்டியவில் தேர்ந்தெடுக்கப்பட்ட காணி 2020 யூன் 1 ஆம் திகதிய கணக்காய்வுத் திகதியின் போதும் கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திடத்தின் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதுடன் செலவுகளும் மீறப்படும். | முதன்மைத் துணை மின்நிலையங்களுக்கான ஆயத்த தயாரிப்பு ஒப்பந்தங்களுக்காக புதிய ஏல ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதன் விளைவாகவும் காணிக் கொள்முதல் மற்றும் கையகப்படுத்தும் செயன்முறையைப் பூர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நேரத்தின் விளைவாகவும் கொள்முதல் கோரல்கள் தாமதமாகின. உரிமையாண்மைத் தகராறின் காரணமாக இரத்தினபிட்டிய பிஎஸ்எஸ் இற்கான காணி நிலத்திற்கான கொள்வனவு நடைமுறை இடைநிறுத்தப்பட வேண்டியிருந்தது. அதே காணி நிலத்திற்கான கையகப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு காணி நிலத்தின் பௌதீக ரீதியான உரித்து மாற்றப்பட்டமைக்காக பிரிவு 38 அ. வெளியிடப்பட்டிருந்தது 2019 நவம்பர் ஒப்பந்தம் பீஎஸ்எஸ் 05 பொதி யின் கீழ் நிர்மாணிப்பிற்காக அனுமதிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை 2019 நவம்பர் 18 ஆம் திகதி கலைக்கப்பட்டு இந்திய ஒப்பந்தக்காரர்கள் கோவிட் தொற்றுநோய் காரணமாக பயணிக்க முடியாதுள்ளதுடன் ஒப்பந்தம் தாமதமாகிக் கைச்சாத்திடப்பட்டிருந்தது. வேலை ஆரம்பிப்பிற்கான முற்பணக் கொடுப்பனவை அடுத்து ஒப்பந்த செல்லுபடித் திகதி நிர்ணயிக்கப்பட்டு ஒப்பந்த நிபந்தனைகளின் படி, கடன் பத்திரம் உருவாக்கப்பட்டது. | வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பநதக்காரர்களின் வேலைகளை நெருக்கமாகக் கண்காணித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | மஹாஇலுப்பலம, எத்தகலா, சீனன்குடா மற்றும் சூரியவெவ விநியோகப் பிரிவுகளில் விநியோக இணைப்புகளை ஸ்தாபித்தல் மற்றும் நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் செயற்திறன் முன்னேற்றத்தின் கூறு தொகுதி 4 இன் கீழ் மஹாஇலுப்பலம, எத்தகலா, சீனன்குடா மற்றும் வெனிவேலரவில் கன்ரிகளின் நிர்மாணிப்பில் 23.5 சதவீத பௌதீக முன்னேற்றமும் நிதி முன்னேற்றம் 12.07 சதவீதமும் சுட்டிக்காட்டப்பட்டது. நிர்மாணத்திற்காக ஏற்ற ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுப்பதற்கான கொள்முதல் நடைமுறை எஸ்சீஏபீசீ உடனான விலை இணக்கப்பாடுகள் காரணமாக நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் ஆரம்பிப்பில் இருந்து 2 ஆண்டு காலத்திற்கு மேலாக தாமதமடைந்திருந்தன. மேலும், 2019 மே 16 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டிருந்ததுடன் நிர்மாணப் பணிகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமையால் 2019 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதுடன் செலவுகளும் மீறப்படும். | ஏல ஆவணத்தை விளம்பரப்படுத்துவதற்கு முன்னர், செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு சரியான வழி ஒப்புதல் செயன்முறையை மேற்கொள்ள வேண்டும். ஒப்பந்தத்தின் உள்ளூர் கூறுகள் கிரய ரீதியாக கழிவிடப்பட்ட விடய வாரியான செலவை முடிவு செய்ததன் காரணமாக ஏல மதிப்பீடு மற்றும் இணக்கப்பாட்டு நடைமுறை தாமதமாயிற்று.<br><br>ஏஎப்டீ கடன் உடன்படிக்கை 2019 மே 03 கைச்சாத்திடப்பட்டதை அடுத்து 2019 மே 16 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த அமுலாக்கல் திகதி வேலை ஆரம்பிப்பிற்கான முற்பணக் கொடுப்பனவை அடுத்தும் ஒப்பந்த நிபந்தனைகளின் படி கடன் பத்திரம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்துமே உருவாக்கப்பட்டது. ஏஎப்டீ கடன் நிபந்தனைகளின் படி, ஏஎப்டீ நிதி செலவீடுகளிற்காக ஓர் விசேட வெளிநாட்டு நாணயக் கணக்கைத் திறப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இது தாமதமாயிற்று. மேலும், தொகுதி 04 இன் வேலை நிகழ்ச்சித்திட்டம் கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக 2 மாதங்களால் தாமதிக்கப்பட்டிருந்தது. இக் காரணங்களால், செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட முடிவுறுத்தல் திகதி 2022 பெப்ரவரி 28 ஆகத் திருத்தப்படடது. | வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பநதக்காரர்களின் வேலைகளை நெருக்கமாகக் கண்காணித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** | **பரிமாற்ற உட்கட்டமைப்பு மேம்பாடு** | | | |
| (i) | நிகழ்ச்சித்திட்ட முன்னேற்ற அறிக்கையின் படி, பொல்பிட்டியவில் இருந்து ஹம்பாந்தோட்டை வரையான 144 கிலோ மீற்றர் பரிமாற்று இணைப்பு ஸ்தாபிப்புப் பணி மற்றும் தொகுதி 1 இன் கீழ் ஹம்பாந்தோட்டை 132/32 கேவீ நிர்மாணிப்பு இலக்கில் இருந்தும் முறையே 37 சதவீத மற்றும் 26.8 சதவீதத்தால் பின்னடைந்திருந்தது. ஓப்பந்த உடன்படிக்கைகளின் படி, குறித்த ஒப்பந்த வேலைகள் அமுலாக்கல் திகதியில் இருந்து 2 ஆண்டுகளுக்குள் குறித்த ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் நிசழ்ச்சித்திட்டக் காலப்பகுதிக்குள்ளும் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படும் என்பது சந்தேகத்திற்கிடமாக இருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதுடன் செலவுகளும் மீறப்படும். | பொல்பிட்டிய - ஹம்பாந்தோட்டை இணைப்பு ஒப்பந்தம் 2018 ஆகஸ்ட் 08 ஆம் திகதி முதல் அமுலாகியிருந்ததுடன் 2021 சனவரி 23 ஆம் திகதி முடிவடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஆரம்ப இணைப்பு அளவீடு, சுற்றாடல் அனுமதி மற்றும் இணைப்பு வழி கையேற்பு என்பவற்றின் நியதிச்சட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு சில காலம் எடுக்கப்பட்டது. நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதும் திட்டமிடப்பட்டவாறு திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. | வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பநதக்காரர்களின் வேலைகளை நெருக்கமாகக் கண்காணித்தல் வேண்டும். |
| (ii) | நிகழ்ச்சித்திட்ட நிர்வாகக் கையேட்டின் படி, பாதுக்க முதல் ஹொரண வரையான 23.7 கிலோ மீற்றர் பரிமாற்றல் இணைப்பு ஒப்பந்தம் யூஎஸ் டொலர் 3.78 மில்லியன் தொகையான கிரய மதிப்பீட்டைக் கொண்டிருந்ததுடன் தொகுதி 2 இன் கீழ் ஹபரண முதல் வாழைச்சேனை வரையான 100 கிலோ மீற்றரான பரிமாற்ற இணைப்பை ஸ்தாபிப்பதற்கான யூஎஸ் டொலர் 3.21 மில்லியன் தொகையான மதிப்பீட்டுக் கிரயத்திலான ஒப்பந்தம் 2016 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டின் போது வழங்கப்படுவதற்கிருந்தது. வரைவு ஏல ஆவணங்களைத் தயாரித்தல், இலங்கை மின்சார சபை பொறியியலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள், இலங்கை மின்சார சபையின் சபை அங்கத்தவர்களின் நியமனத்திலான தாமதம் போன்ற பல்வேறு காரணங்களால் கொள்முதல் | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதுடன் செலவுகளும் மீறப்படும். | ஹொரண பாதுக்க மற்றும் ஹபரண வாழைச்சேனை ஏஎப்டீ கடனினால் நிதியிடப்பட்டிருந்தது. இதன் படி, இரு ஒப்பந்தங்களும் 2019 யூன் மாதம் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், ஒப்பத உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து ஹபரண வாழைச்சேனை ஒப்பந்தம் 2019 நவம்பர் முதல் அமுலாக்கப்பட்டது. ஹொரண பாதுக்க ஒப்பந்தம் இணைப்பு வழியில் பொது மக்களின் முறைப்பாடுகளின் காரணமாக அமுலாக்கலில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பநதக்காரர்களின் வேலைகளை நெருக்கமாகக் கண்காணித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறைகளின் அவ் ஒப்பந்தங்களை வழங்குவதில் இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. எவ்வாறெனினும், பாதுக்க முதல் ஹொரண வரையான பரிமாற்றல் இணைப்பு ஸ்தாபிப்பதற்கான ஒப்பந்தம் 2019 யூன் 20 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய ஒப்பந்தம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் ஆரம்ப தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிராததன் காரணமாக பாதுக்க முதல் ஹொரண வரையான பரிமாற்றல் இணைப்பு ஸ்தாபிப்பதற்கான ஒப்பந்தம் 2019 யூன் 20 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தக்காரரால் நிர்மாணிப்பு வேலைகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. | | | |
| (iii) | நிகழ்ச்சித்திட்ட முன்னேற்ற அறிக்கையின் படி, நடுக்குடா கிரிட் துணை நிலைய நிர்மாணிப்பின் கீழான பணி மற்றும் மன்னார் கிரிட் துணை மின் நிலையத்தை மேம்படுத்தல் மற்றும் மன்னார் முதல் நடுக்குடா வரையான தொகுதி 2 இன் கீழ் பரிமாற்ற இணைப்பை ஸ்தாபித்தல் போன்றன ஒப்பந்தம் வழங்கலில் ஏற்பட்ட தாமதம், 2019 இன் ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கோவிட் - 19 நோய்த் தொற்று போன்ற பல்வேறு காரணங்களால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலக்கிலிருந்து முறையே 61.5 சதவீதத்தாலும் 90.85 சதவீதத்தாலும் பின்னடைந்திருந்தன. ஒப்பந்த உடன்படிக்கைகளின் படி, ஒப்பந்த வேலைகள் 2020 மார்ச் இறுதியளவில் பூர்த்தியடைந்திருக்க வேண்டிய போதிலும் பணிகள் 2020 யூன் 01 கணக்காய்வுத் திகதி | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதுடன் செலவுகளும் அதிகரிக்கும். | டீடபிள்யூசீமு இன் வங்காலை பறவைகள் சரணாலயம் மற்றும் ஆஅவ யால் நிர்மாணிக்கப்படுவனவற்றிற் கான தடை முதலிய மன்னார் நடுக்குடா பரிமாற்று இணைப்பின் பூர்த்தித் திகதி 2020 மார்ச் முதல் 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதிக்கு கோவிட் 19 காரணமாக மாற்றப்பட்டிருந்தன. ஏவ்வாறெனினும், சகல நிர்மாணிப்பு நடவடிக்கைகளும் 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி பூர்த்தியடைந்து தற்போது வலுவூட்டப்படுகின்றன. ஓஊஎம் பரிந்துரைக்கப்பட்ட இலங்கைக்கு வெளியிலான நிபுணர்களின் பணிக்கு பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் கோவிட் 19 இனால் நடுக்குடா ஜீஎஸ்எஸ் இன் பூர்த்தித் திகதி 2020 மார்ச் | பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வரையிலும் பூர்த்தியடைந்திருக்கவில்லை. | | இல் இருந்து 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதியாக மாற்றப்பட்டிருந்தது. | |
| (iv) | கொழும்பு பீ கட்ட துணை மின்நிலையம் மற்றும் கொழும்பு சீ முதல் கொலொன்னாவ துணை மின்நிலைய உள் மற்றும் வெளி இணைப்பு மற்றும் தொகுதி 3 இன் கீழான கொழும்பு சீ மற்றும் கொலொன்னாவ துணை மின்நிலையம் ஆகியவற்றின் நிர்மாணிப்புகளுக்காக வரைவு ஏல ஆவணங்கள் 2017 பெப்ரவரி 20 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், வரைவு ஏல ஆவணங்கள் தயாரிப்பு, எஸ்சீஏபீசீ இடமிருந்தான அங்கீகாரம் மற்றும் வரைவு ஏல ஆவணங்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான அங்கீரம் பெறுவதில் ஏற்பட்ட தாமங்கள் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள், இலங்கை மின்சார சபையின் சபை அங்கத்தவர்களின் நியமனத்திலான தாமதம் போன்ற பல்வேறு காரணங்களால் தாமதமடைந்திருந்தன. ஆகவே, 2019 யூலை 2 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும், யூஎஸ்டொலர் 3.7 மில்லியன், யூரோ 3.1 மில்லியன், சீஎச்எப் 3 மில்லியன் மற்றும் ரூபா 598.072 மில்லியன் பெறுமதியான ஓர் ஒப்பந்தத்தின் கொள்முதல் நடைமுறை ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு மேல் கடந்திருந்தது. உடன்படிக்கையின் படி, ஆரம்பத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிர்மாண வேலைகள் | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதுடன் செலவுகளும் அதிகரிக்கும். | கொழும்பு துணை பீ செயற்திட்டம் ஏஎப்டீ இனால் நிதியிடப்பட்டு 2019 மே முதல் அமுலாகும் வகையில் கடன் அமுலாக்கப்பட்டிருந்தது. இதன் படி, 2019 ஒக்டோபர் மாதம் ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டிருந்தது. ஆரம்ப வடிவமைப்பு வேலைகள், கள அளவீடுகள் மற்றும் மண் வள ஆய்வு நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட முன்னரேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. நிர்மாணப் பணிகள் நடைமுறையில் உள்ளன. | பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர்களின் வேலைகள் மிக உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும். |

ஒப்பந்தக்காரரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் 264.7 மில்லியனிற்குச் சமமான ரூபா 39,453 மில்லியன் ஒதுக்கீட்டுத் தொகையில் ஐ.அ.டொலர் 53 மில்லியனிற்குச் சமமான ரூபா 7.740 மில்லியன் மாத்திரமே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், நிகழ்ச்சித்திட்ட நிர்வாகக் கையேட்டின் நிதி இலக்குகளின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஐ.அ.டொலர் 190.4 மில்லியனிற்குச் சமமான ரூபா 27,751 மில்லியன் பயன்படுத்தப்பட எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அத் திகதியில் உள்ளவாறு குறித்த இலக்கில் 28 சதவீதம் மாத்திரமே எய்தப்பட்டிருந்தது. நிதியத்தின் குறைவான பயன்பாட்டின் விளைவாக கடன் வழங்கும் முகவரகத்தினால் உறுதிப்பாட்டுக் கட்டணமாக ரூபா 30.06 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் உண்டு. | ஏடீபீ எஸ்ஆர்ஜ 3484/3483 கடன் 2017 சனவரி முதல் அமுலாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2017 யூலை அன்றே அமுலாக்கப்பட்டிருந்தது. ஏஎப்டீ கடன் 8313 ஆனது 2019 மே முதல் அமுலாக்கப்பட்டது. ஆரம்ப சுற்றாடல் அனுமதி மற்றும் காணி அளவீட்டிற்காக சிறுது காலம் எடுக்கப்பட்டது. இதன் படி, சகல செயற்திட்டங்களினதும் செலவீட்டு திட்டமும் நகர்த்தப்பட்டுள்ளன. புயன்படுத்தப்பட்ட நிதிக்கான வட்டிக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்படாத நிதிக்கான உறுதிப்பாட்டுக் கட்டணங்களும் செலுத்தப்பட்டிருந்தன. | நிகழ்ச்சித்திட்ட நிர்வாகக் கையேட்டின் நிதி இலக்குகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவலின் படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மோட்டார் வாகனங்கள் நேரடியாக இறக்குமதி செய்யப்படாது ஒப்பந்தக்காரர்களினூடாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஓப்பந்தக்காரர்களின் இலாப எல்லை மற்றும் மேந்தலைகள் உள்ளடங்கலாக மோட்டார் | செயற்திட்ட நோக்கங்களை எய்துவதுடன் தொடர்புபட்டிராத செலவினங்களை ஏற்றல். | இவை மொத்த தொகை ஈபீசீ ஒப்பந்தங்களாவதுடன் ஒவ்வொரு விலைக் கூறும் அவற்றிற்கு உரிய இலாபங்களையும் மேந்தலைகளையும் கொண்டிருந்தன. ஆகவே, விலைகள் ஒவ்வொரு விடயத்தினது உள்ளபடியான விலையை பிரதிபலிக்க மாட்டாததுடன் தமது காசுப்பாய்ச்சலைக் | சொத்து முகாமைத்துவக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வாகனப் பட்டியல் பெறுமதியைப் பார்க்கிலும் கூடியளவு தொகையை செலுத்த வேண்டியிருந்தது. 2016 முதல் 2019 வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 28 மோட்டார் வாகனங்களுக்கு நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 165.707 மில்லியன் தொகை மீளளிக்கப்பட்டிருந்த போதிலும் வாகனங்களின் உரித்து ஒப்பந்தக்காரரிடமே காணப்பட்டது. இதன் விளைவாக ஒப்பந்தக்காரர் ஒப்பந்த வேலைகளைக் கைவிடுவாராயின் அல்லது விபத்துக்குட்பட்டு வாகனம் கைவிடப்பட வேண்டி ஏற்படின் நிகழ்ச்சித்திட்டத்தினாலேயே இழப்புகள் எதிர்நோக்கப்பட வேண்டிவரும். மேலும், ரூபா 17.65 மில்லியன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தக்காரர் வாகனங்கள் வழங்கும் வரையில் வாடகைக் கட்டணமாக தனியார் தரப்பினருக்கு ரூபா 17.65 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | கருத்திற்கொண்டு ஒப்பந்தக்காரரால் விலையிடப்பட்டிருக்கக் கூடியன. விலையிடப்பட்ட சகல பொருட்களினதும் உரித்து செயற்திட்ட வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் செயற்திட்டம் பூர்த்தியடைந்ததும் இலங்கை மின்சார சபையிடம் ஒப்படைக்கப்படும். விநியோகப் பிரிவு 04 இன் கீழ் புதிதாக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு உருவாக்கப்பட்டிருந்தமையால் ஆரம்ப வேலைகளிற்கு பயன்படுத்துவதற்காக எவ்வித வாகனங்களும் இருக்கவில்லை. ஆகவே, ஆரம்ப வேலைகளை மேற்கொள்வதற்காக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு உருவாக்கப்பட்டதில் இருந்து ஒப்பந்தம் வழங்கப்பட்டது வரையான காலப்பகுதிக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான வாகனங்கள் வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டிருந்தன. குறிப்பிடப்பட்ட தொகையானது ஒப்பந்தம் வழங்கப்பட முன்னரான மொத்தப் பெறுமதியாகும். |

### 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ----------------------------------- | ------------- | --------------------- | --------------------- |
| (அ) | இலங்கை மின்சார சபையின் 03 வெவ்வேறு பகுதி தலைவர்களின் கீழ் 03 பாரிய கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் முறையான ஒருங்கிணைப்பு இல்லாததன் காரணமாக நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கலில் தாமதத்தை | செயற்திட்ட நடவடிக்கைகளின் கண்காணிப்பு நலிவானதாகும். | சகல செயற்திட்டக் கூறுகளுக்காகவும் மாதாந்த முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், சக்தி அமைச்சு, வெளி வள திணைக்களம் மற்றும் | கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை மீதான கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏற்படுத்தியிருந்தன. | | திறைசேரியின் செயற்திட்ட கண்காணிப்பு திணைக்களம் போன்றவற்றால் செயற்திட்ட முன்னேற்ற மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (ஆ) | 2018 ஒக்டோபர் 17 ஆம் திகதிய சீஎல்கே 1022 01கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் படி, ஏஜன்ஸ் பிரஞ்சைஸ் 30 மில்லியன் யூரோக்களை வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2019 நிதிக்கூற்றுக்களில் 30 மில்லியன் யூரோக்கள் தவறாக யூஎஸ் டொலர் 30 மில்லியனாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களின் பிறழ்கூற்றுக்கள் | - | பிறழ்கூற்றுக்கள் கொண்ட அனைத்துப் பதிவேடுகளும் சீராக்கப்பட வேண்டும். |